

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 31.கண்டபத்து

(தில்லையில் அருளியது)

நிருத்த தரிசனம்

(தரவு கொச்சகக் கலிப்பா)



# திருச்சிற்றம்பலம்



இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தம்இலா ஆனந்தம் அணிகொள் தில்லைகண்டேனே





வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வுஎய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டு என்பிறப்புஅறுத்த
இணைஇலியை
அனைத்துலகும் தொழும் தில்லை அம்பலத்தே
கண்டேனே





உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்துஎன் உளம்மன்னிக்
கருத்துஇருத்தி ஊன்புக்குக் கருணையினால்
ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாய்அடியேன் அணிகொள்
தில்லைகண்டேனே





கல்லாத புல்அறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாளனாய் வந்து வனப்புஎய்தி இருக்கும்வண்ணம்
பல்லோரும் காண என்தன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே





சாதிகுலம் பிறப்புஎன்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம்இலி நாயேனை அல்லல்அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறர்உருவம் யான்எனதுஎன் உரைமாய்த்துக்
கோதுஇல் அமுதானானைக் குலாவுதில்லை கண்டேனே

5





பிறவிதனனை அறமாற்றிப் பிணிமூப்புஎன்ற இவைஇரண்டும்

உறவினொடும் ஒழியச்சென்று உலகுடைய ஒருமுதலைச்

செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி

மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே





பத்திமையும் பரிசும்இலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன்இவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தம்எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே





அளவுஇலாப் பாவகத்தால் அமுக்குண்டு இங்கு

அறிவுஇன்றி

விளைவுஒன்றும் அறியாதே வெறுவியனாய்க்

கிடப்பேனுக்கு

அளவுஇலா ஆனந்தம் அளித்துஎன்னை ஆண்டானைக்

களவுஇலா வானவரும் தொழும்தில்லை கண்டேனே.8





பாங்கினொடு பரிசுஒன்றும் அறியாத நாயேனை
ஓங்கிஉளத்து ஒளிவளர உலப்புஇலா அன்புஅருளி
வாங்கிவினை மலம்அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே





பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமில்லாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்துஆண்ட கிளர்ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே

10



ஸ்ரீ மாணிக்கவாசகர்